# ‘நீட்’ தேர்வை துவக்கத்திலிருந்தே -

# உறுதியாக எதிர்த்தது தி.மு.க.வும், அதன் தலைவர் மு.க.ஸ்டாலினும்தான்!

## மக்களவையில் - ஆதாரங்களோடு தயாநிதி மாறன் ஆவேச உரை!

**புதுடெல்லி, ஜூலை 30-**

**‘நீட்’ தேர்வை துவக்கத்திலிருந்து உறுதியாக எதிர்த்தது தி.மு.க.வும், அதன் தலைவர் மு.க.ஸ்டாலினும் தான் என்று, மக்களவையில் ஆதாரங்களோடு தயாநிதி மாறன் ஆவேச உரையாற்றினார்.**

**மக்களவையில் ‘நீட்’ குறித்து தயாநிதி மாறன் பேசியதாவது:-**

வணக்கம், வாழ்க தமிழ்!

“பொறுத்தது போதும்! நீட் தேர்வை தடை செய்யுங்கள், நீட் தேர்வை ரத்து செய்யுங்கள்” என்று என் பேச்சை தொடங்க விரும்புகிறேன். இதுவரை இந்தியாவில் 107 மாணவர்கள்... போட்டித் தேர்வுகளால் தற்கொலை செய்துகொண்டனர். அதில் 93 பேர் நீட் தேர்வினால்.

2026-ல் மட்டுமே 14 மாணவர்கள் நீட் காரணமாக தற்கொலை செய்துகொண்டனர். தமிழ்நாட்டில் இன்று வரை 26 இளைஞர்கள் தற்கொலை செய்துகொண்டனர். நீட் தேர்வினால் ஏற்படும் மன அழுத்தத்தை தாங்க முடியாமல். அவர்கள் எல்லாரும் வெவ்வேறு பிரிவினரில் இருந்து வந்தவர்கள்... கிராமங்களில் மட்டுமல்ல நகரங்களிலும்.

### சபாநாயகர் தொகுதியிலேயே ‘நீட்’டால் 40 மாணவர்கள் பலி!

மக்களவை சபாநாயகர் ஓம். பிர்லா அவர்களின் சொந்த தொகுதியான கோட்டாவில் இன்று வரை 40க்கும் மேற்பட்ட மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டனர். அவர்கள் ராஜஸ்தானை மட்டும் சேர்ந்தவர்கள் இல்லை, மற்ற மாநிலங்களில் இருந்தும் கோச்சிங் சென்டர்களுக்கு வந்து பயிற்சி பெறும் மாணவர்கள். அங்குள்ள பிஜேபி அரசு தற்கொலைகளைத் தடுக்க ஒரு அற்புதமான யோசனையைக் கொண்டு வந்தது. என்ன செய்தார்கள் தெரியுமா? மாணவர்கள் மின்விசிறியில் தொங்கி தற்கொலை செய்வதால், ராட்களை எடுத்துவிட்டு அதற்கு பதிலாக ஸ்பிரிங் வைப்போம் என்றார்கள். மாணவர் தொங்க முயன்றால், அவர் இறக்காமல் விசிறி கீழே விழுந்துவிடும் என்றார்கள்.

இன்று நீங்கள் கொண்டு வரும் இந்த மசோதாவும் அதே மாதிரிதான். முக்கியப் பிரச்சினையை நீங்கள் தீர்க்கவில்லை. முக்கியப் பிரச்சினை நீட். நீட் தேவையில்லை. நீட் சமமானதல்ல. நீட் மாணவர்களுக்கு எதிரானது. மருத்துவர் ஆக விரும்பும் கிராமபுர, ஏழை எளிய, முதல் தலைமுறை மாணவர்களுக்கு எதிரானது.

நமது நாட்டில் சீரான கல்வி முறை இல்லை. தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் முறை மேற்கு வங்காளத்திலோ, நாகலாந்திலோ பின்பற்றப்படுவதில்லை. ஒவ்வொருவரும் தங்கள் தாய்மொழியில் படிக்கிறார்கள். தமிழ் வழிப் பள்ளிகளில் படித்தவர்கள் உயரங்களை அடைந்துள்ளனர். நாம் thiru. அப்துல் கலாம் அவர்களைப் பற்றி பெருமையுடன் பேசுகிறோம். அவர் எங்கே படித்தார்? தமிழ் வழிப் பள்ளியில். அவர் நம் நாட்டின் Missile Man என போற்றப்படுகிறார். டாக்டர் மயில்சாமி அண்ணாதுரை, இஸ்ரோவின் தலைவர், செவ்வாய் பயணத்தை ஏவியவர். அவர் தமிழ் வழிப் பள்ளியில் படித்தார்.

### ‘நீட்’ டுக்கு எதிராக தி.மு.க.வின் குரல்!

நீட் தேர்வை எதிர்த்து முதலில் குரல் கொடுத்தது திமுகவும் தமிழ்நாடும்தான். நிர்வாகத் தவறு மட்டும் அல்ல, அடிப்படை வடிவமைப்பே தவறு என்பதால் எதிர்த்தோம். ஒரு உயர் அழுத்த தேசியத் தேர்வு மட்டும் அனைத்து மாணவர்களுக்கும் மருத்துவக் கல்வி வாய்ப்பை தீர்மானிக்கிறது. ஏழை மாணவர்கள் மருத்துவர் ஆக வேண்டும் என்று கனவு காண்கிறார்கள். அவர்களது பெற்றோர் சாதாரண விவசாயிகள், தொழிலாளர்கள், தினக்கூலிகள். அவர்கள் செய்ய முடியாததை அவர்கள் செய்ய வேண்டும் என்று கனவு காண்கிறார்கள். ஆனால் இந்த நுழைவுத் தேர்வினால் அக்கனவுகள் சுக்கு நூறாக உடைக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் திமுக ஆரம்பம் முதலே நீட் நுழைவுத் தேர்வை எதிர்த்தது. முன்மொழியப்பட்டபோது எதிர்த்தோம். திணிக்கப்பட்டபோது எதிர்த்தோம். மாணவர்கள் இடங்களை இழந்தபோது எதிர்த்தோம். மாணவர்கள் உயிரை இழந்தபோது எதிர்த்தோம். இது திறன் தேர்வு அல்ல, கோச்சிங் சென்டர் தேர்வு என்று நாங்கள் எச்சரித்தோம். ஆனால் எங்கள் எச்சரிக்கைகள் நீங்கள் கேட்கவில்லை.

2016 பிப்ரவரியிலேயே, எங்கள் மறைந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர், அனைத்து தொழில்நுட்பக் கல்வி நுழைவுத் தேர்வையும் எதிர்த்தார். சில பிரிவு மாணவர்களுக்கு வெற்றி எளிதாகவும், பெரும்பான்மையோருக்கு தோல்வி தவிர்க்க முடியாததாகவும் இருக்கும் என்று காரணம் சொன்னார்.

2016ல் திமுக மாநிலங்களவையில் நீட் தேர்வுக்கு எதிராக வாக்களித்தது. 2017ல் 9க்கும் மேற்பட்ட சூழ்நிலைகளில் திமுக நீட் தேர்வுக்கு எதிராக கடுமையாக போராடியது. தமிழ்நாட்டிற்கு நீட் விலக்கு கோரி எங்கள் கழக பொதுக்குழுவில் தீர்மானம் நிறைவெற்றபட்டு, ஒன்றிய அரசு அலுவலகங்களுக்கு வெளியே போராட்டம் நடத்தினோம். தமிழ்நாட்டு எம்.பி.க்கள் 2017 பிப்ரவரி 17ம் தேதி பிரதமரை சந்தித்து ஏன் நீட் வேண்டாம் என்று விளக்கினார்கள்.




மாணவர்கள் பாதிக்கப்பட்டபோது,

### தலைவர் மு.க.ஸ்டாலின் நடத்திய போராட்டம்!

எங்கள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 2017 ஜூலையில் மாநிலம் முழுவதும் மனித சங்கிலி போராட்டம் நடத்தினார். செப்டம்பரில் அரியலூரைச் சேர்ந்த 17 வயது அனிதா தன் உயிரை மாய்த்துக்கொண்டார். அவர் ஒரு தலித் பெண், முதல் தலைமுறை மாணவி, வகுப்பில் முதலிடம் பெற்றவர். ஆசிரியர்களும் பெற்றோரும் எல்லோரும் அவரைப் பாராட்டி, நீ மருத்துவர் ஆவாய் என்று சொல்வார்கள். ஆனால் நீட் வந்தது. அப்போது நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் “தமிழ்நாட்டிற்கு நீட் வராது” என்றார். ஆனால் நீட் வந்தது.

அனிதா, எந்த கோச்சிங் சென்டருக்கு செல்லவில்லை. ஏனென்றால் அவருக்கு பண பலம் இல்லை. சிறிய கிராமத்தைச் சேர்ந்தவர். ஏழை எளிய குடும்பத்திலிருந்து வந்தவர். பள்ளியில் முதலிடம் பெற்ற அந்த மாணவி நீட்ல் தோல்வியடைந்தார். மனஅழுத்தத்தை தாங்க முடியாமல் உயிரை மாய்த்துக்கொண்டார். அவரது தியாகத்திற்கு நாங்கள் வீர வணக்கம் செலுத்துகிறோம். அதுதான் நீட் தேர்வுக்கு எதிராக போராட எங்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் உத்வேகம் தந்தது. நீட் தேர்வை தடை செய்து ரத்து செய்ய திமுக மாநில அளவிலான மாநாடுகளை நடத்தியது. 2018ல் எங்கள் சட்டமன்றத்தில் மட்டும் அல்ல, எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அனைத்து முதல்வர்களுக்கும் நீட் தேர்வை எதிர்க்குமாறு கடிதம் எழுதினார்.

2019ல் எங்கள் எம்.பி.கள் அனைவரும் மக்களவையில் நீட் தேர்வுக்கு எதிராக போராடினார்கள். 2020ல் எங்கள் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு நீட் தேர்வின் ஆபத்துகளை எச்சரித்து கடிதம் எழுதினார். மீண்டும் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி தமிழ்நாட்டின் அரசியல் கட்சிகளை ஒன்றுபட அழைத்தார். 2020ல் நுழைவுத் தேர்வுகளில் இருந்து விலக்கு கோரி நீதிமன்றங்களை அணுகினோம்.

எங்கள் இளைஞர் அணிச் செயலாளர் தமிழ்நாட்டின் முன்னாள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாநிலம் முழுவதும் இளைஞர்களை திரட்டி நீட் எதிர்ப்புப் போராட்டம் நடத்தினார். 2021ல் எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் நீட்டின் தாக்கத்தை ஆய்வு செய்ய ஏ.கே.ராஜன் குழுவை அமைத்தார். தமிழ்நாட்டில் நீட் தேர்வை தடை செய்ய ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றினோம்.

ஆனால் அப்போதைய ஆளுநர்... உங்கள் ஆளுநர்... மசோதாவுக்கு ஒப்புதல் தர மறுத்துவிட்டார். நடவடிக்கை கோரி நாங்கள் மீண்டும் நாடாளுமன்றத்தில் போராடினோம். மீண்டும் எங்கள் தலைவர் தமிழ்நாடு முழுவதும் அனைத்துக் கட்சிகளையும் இந்தப் போராட்டத்தில் ஒருங்கிணைத்தார். 2022ல் எங்கள் தலைவர் மீண்டும் பிரதமரை நீட் தேர்வுக்கு எதிராக வலியுறுத்தினார். ஆனால் நீங்கள் அவை எதற்கும் செவிசாய்க்கவில்லை. எதுவும் நடக்கவில்லை.

### ஏழை – எளிய மாணவர்களுக்கு எதிரான ‘நீட்’ தேர்வு!

எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் நீட் தேர்வை ரத்து செய்ய அனைவரிடமும் வலியுறுத்தினார் ஏனென்றால் இது ஏழை எளிய மாணவர்களுக்கு எதிரானது. 12ம் வகுப்பு பாடப்படிப்பை படிக்க வேண்டாம் என்று தவறாக் ஊக்குவிக்கிறது. 12ம் வகுப்பு தேர்வில் எத்தனை மதிப்பெண் வாங்கினாலும் போதாது, இப்போது கோச்சிங் சென்டருக்கு போய், ஆண்டுக்கு 5 முதல் 10 லட்சம் செலவழித்து நீட் தேர்வுக்கு படிக்க வேண்டும் என்கிறது.

தமிழ்நாட்டில் நாங்கள் பிரச்சாரம் நடத்தி 85 லட்சம் கையெழுத்துகளை சேகரித்து இந்திய குடியரசுத் தலைவருக்கு அனுப்பினோம். 2024ல் ஏ.கே.ராஜன் குழு அறிக்கை 9 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு நாடு முழுவதும் வழங்கப்பட்டது.

நீட் அறிமுகப்படுத்தப்பட்டு ஒரு தசாப்தம் ஆகப்போகிறது. நீட் தேர்வினால் மருத்துவர்களின் தரம் உயர்ந்ததா? குழந்தை இறப்பு விகிதம் திடீரென குறைந்ததா? மருத்துவர்நோயாளி கையாளுதல் முறை மேம்பட்டதா? கிராமப்புற சுகாதாரம் மேம்பட்டதா? இந்தியாவின் மருத்துவர் பற்றாக்குறை மறைந்ததா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் இல்லை என்றால், ஏன் நீட் வேண்டும்?

நமது பிரதமரின் சொந்த மாநிலமான குஜராத்தில் ஒரு இளம் மாணவி 11, 12ஆம் வகுப்பு பொது தேர்வு பாடங்களை புறக்கணித்துவிட்டு, நேரடியாக கோச்சிங் சென்டருக்கு முக்கியத்துவம் அளிதார். கல்வி முறையின் அடிப்படைகளை அலட்சியமாக எடுத்துக்கொண்டார். நீட் தேர்வில் 720க்கு 705 மதிப்பெண் வாங்கினார். ஆனால் 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற முடியவில்லை. ஒருமுறை அல்ல இருமுறை பொதுத்தேர்வில் தோல்வியடைந்தார். ஏனென்றால் முறையே தவறு.

தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள் 16 17 வயது குழந்தைகள் நுழைவுத் தேர்வு மையங்களுக்கு முன் எப்படி தொல்லைப்படுத்தப்படுகிறார்கள் என்று. அவர்களை கடுமையாக சோதிக்கிறார்கள். உலோகப் பொருள் அனுமதிக்கப்படாது என்று கொலுசு, காதணி இருந்தால் எடுத்துவிடுகிறார்கள். உலோக பட்டன் இருந்தால் வெட்டிவிடுகிறார்கள். பெண் குழந்தைகளுக்கு இன்னும் மோசம். உள் உடைகளைக் கூட கழற்றச் சொல்கிறார்கள். இப்படித்தான் தேர்வை நடத்த வேண்டுமா? இதைத்தானா நீங்கள் விரும்புகிறீர்கள்?

### ‘நீட்’ தேர்வுக்கு முன் படித்த மருத்துவர்கள் சரியில்லையா?

நீட் தேர்வுக்கு முன் படித்த மருத்துவ மாணவர்கள் நன்றாகச் செயல்படவில்லை என்று நீங்கள் சொல்கிறீர்களா? பிரதமர், குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர், நீங்கள், நான் - எல்லோரும் நீட் எழுதாத மருத்துவர்கள் இடம்தான் சிகிச்சை பெறுகிறோம். அவர்கள்தான் உலகின் சிறந்த மருத்துவர்கள். இந்தியாவின் சிறந்த மருத்துவர்கள். பிறகு ஏன் நீட்? அமெரிக்க முறை வேண்டுமா? அரசுக்கு ஆலோசனை சொல்பவர்கள் அமெரிக்க சமூகத்தில் இருந்து வெளியேறியவர்கள், அல்லது திரும்பி வந்து இப்போது கொள்கை தீர்மானிக்கும் கிளப்பாக மாறியவர்கள்? 3 வருட பட்டப்படிப்பை 4 வருடமாக மாற்றவும், உலகளாவிய தேர்வுகளை கொண்டு வரவும் விரும்புகிறார்கள்? நம்மால் இதையெல்லேம் ஏற்றுகொள்ள முடியாது. நாம் வேறு சமூகம். நமது இலக்குகள் வேறு. நமது கிராமத்து மாணவர்கள், குழந்தைகள் முன்னேற வேண்டும். எல்லோராலும் கோச்சிங் சென்டருக்கு செல்ல முடியாது . எல்லோராலும் அவ்வளவு பணம் செலுத்தி படிக்க முடியாது.

ஒரு புள்ளிவிவரம் சொல்லட்டுமா - ஆண்டுதோறும் 22 லட்சம் மாணவர்கள் நீட் தேர்வு எழுதுகிறார்கள். அதில் 12 லட்சம் பேர் தேர்ச்சி பெறுகிறார்கள். இந்தியாவில் UG மருத்துவ இடங்கள் எத்தனை தெரியுமா? 1,39,000 இடங்கள். மீதமுள்ள மாணவர்களுக்கு என்ன நடக்கிறது? அவர்கள் அனுபவிக்கும் மனவேதனையை கற்பனை செய்து பாருங்கள். CBSE படித்தால் சரி, மாநில பாடத்திட்டம் படித்தால் முடியாது என்கிறீர்கள். ஏன் பாகுபாடு காட்டுகிறீர்கள்? மறுபக்கம் பாருங்கள். ஒன்றிய அரசு எத்தனை புதிய மருத்துவக் கல்லூரிகளை கட்டியுள்ளது? தமிழ்நாட்டில் மதுரை AIIMS இன்னும் கட்டப்படவில்லை. மருத்துவக் கல்விக்கு இவ்வளவு தேவை இருக்கும்போது இடங்களை அதிகரிக்க வேண்டும். நீங்கள் அதை செய்யவில்லை.

மேலும் பாருங்கள் இந்த முரண்பாட்டை மருத்துவ PGயில் தனியார் கல்லூரிகளில் அதிக காலி இடங்கள் உள்ளன. ஆனால் PG நீட் காரணமாக யாரும் வரவில்லை. அரசு என்ன செய்கிறது? வெட்கம்... தகுதி அளவை 0க்கு குறைத்தது. 0 பெர்சென்டைல் கிடைத்தாலும் சேரலாம். இன்னும் யாரும் இல்லை. பிறகு அரசு ஒரு அற்புதமான யோசனை கொண்டு வந்தது. ஏன் 0? மைனஸ் 10க்கு போவோம். இப்போது மைனஸ் 10 போதும் PGக்கு. நாம் இங்கே என்ன சாதிக்கிறோம்?

### ஒன்றிய கல்வி அமைச்சர்கள் மாறியது ஏன்?

கடந்த 12 ஆண்டுகளில் 5 ஒன்றிய கல்வி அமைச்சர்கள் மாறியுள்ளனர். திருமதி. ஸ்மிருதி இரானி தொடங்கி -பிரகாஷ் ஜவடேகர் - ரமேஷ் போக்ரியால -தர்மேந்திர பிரதான் - இப்போது பிரலாத் ஜோஷி. எல்லோரும் ஏதாவது ஒரு கசிவை மரபுரிமையாகப் பெறுகிறார்கள். 2015ல் ஆல் இந்தியா ப்ரீமெடிக்கல் டெஸ்ட் கேள்வித்தாள் கசிவு உச்சநீதிமன்றத் தலையீட்டை ஏற்படுத்தியது. 2018ல் CBSE கேள்வித்தாள்கள் கசிந்தன. 2020ல் கொரோனா காலத்தில் மாணவர்கள் நாடு முழுவதும் நீட் தேர்வை ஒத்திவைக்கக் கோரினர்.

2024ல் நீட்UG கேள்வித்தாள் கசிவால் சமரசம் ஆனது. சிபிஐ விசாரணைகள், பல எஃப்.ஐ.ஆர்கள், சார்ஜ் ஷீட்கள் வந்தன. 2026ல் வரலாறு மீண்டும் நடந்தது. நீட் அறிமுகப்படுத்தப் பட்டதில் இருந்து முதன்முறையாக தேர்வே ரத்து செய்யப்பட்டு மீண்டும் நடத்தப்பட்டது. ஏனென்றால் “Guess Paper” 180 கேள்விகளில் சுமார் 120 நீட் தேர்வின் கேள்விகளுடன் பொருந்தியதாக கூறப்பட்டது.

இதில் மிகப்பெரிய முரண்பாடு - நமது நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனின் மேற்கோள் அனைத்து யூடியூப் சேனல்களிலும் சுற்றி வருகிறது - “மாணவர்கள் வந்து என்னை சந்தித்தார்கள். கேள்வித்தாள் கசிந்ததில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம் என்றார்கள். படிக்க அதிக நேரம் கிடைத்தது, அதிகம் படித்து அதிக மதிப்பெண் வாங்க முடிந்தது.” இது உங்கள் அரசின் ஒன்றிய நிதியமைச்சர்... இதைத்தானா நீங்கள் ஆதரிக்கிறீர்கள்?

மீண்டும் சொல்கிறேன். பொறுத்தது போதும். நீட் தேவையில்லை. “ஒரே இந்தியா, ஒரே தேர்வு” என்ற தவறான் வழியில் போகாதீர்கள். முதலில் புரிந்துகொள்ளுங்கள் - ஒற்றுமை பன்முகத்தன்மையில் உள்ளது. நாம் எல்லோரும் வேறுபட்டவர்கள் ஆனால் நாம் எல்லோரும் இந்தியர்கள். இந்தியாவின் ஒரு அங்கமாக இருக்க விரும்புகிறோம், ஆனால் நீங்கள் திணிக்கும் வழியில் அல்ல. நமது பலம் நமது பன்முகத்தன்மையிலிருந்து வருகிறது. இந்தியா பல மாநிலங்களால் ஆனது. இந்தியர்கள் பல மொழிகளைப் பேசுகிறார்கள். என் தாய்மொழியில் நான் பெருமைப்படுகிறேன். நீங்களும் உங்கள் தாய் மொழியில் பெருமைப்படுவீர்கள் என்று நம்புகிறேன்.

யாரும் தங்கள் தாய்மொழி அழிக்கப்பட வேண்டும் என்று விரும்பவில்லை. இந்த மசோதாவை அறிமுகப்படுத்திய அமைச்சருக்கு ஒரே ஒரு காரணத்திற்காக மட்டும் நன்றி சொல்ல வேண்டும்... தவறாக நினைக்காதீர்கள்... இந்த முறை இந்தியிலோ சமஸ்கிருதத்திலோ பெயரிடப்படவில்லை. ஆங்கிலத் தொடர்ச்சியாக உள்ளது. நீங்கள் சமஸ்கிருதம் அல்லது இந்தியை திணிக்க முயன்றிருக்கலாம், ஆனால் தெருக்களில் வெடிக்கும் போராட்டத்தை அறிவீர்கள். அதனால் ஆங்கிலப் பெயர் முறையைப் பின்பற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

### மொழிக்காகப் போராட மாணவர்கள் தயார்!

(இடையூறுகள்: “தமிழில் கொண்டு வரலாமா?”)

தமிழ் மட்டும் ஏன்? எல்லா மொழிகளிலும் செய்யுங்கள். 21 அதிகாரப்பூர்வ மொழிகளிலும் செய்யுங்கள். நாங்கள் எல்லா மொழிகளுக்கும் ஆதரவு. தமிழுக்கு மட்டும் அல்ல. மலையாளம், கன்னடம், தெலுங்கு, மராத்தி, பெங்காலி - எல்லாவற்றிற்கும்.

(இடையூறுகள்: “அடுத்த போராட்டம் மொழிக்காக இருக்கும், மாணவர்கள் தயாராக உள்ளனர்”)

கல்வி ஒன்றிய பட்டியலில் இல்லை. இணைப்பட்டியலில் உள்ளது. மாநிலங்கள் தேவை. மாநிலங்கள் எதிர்க்கும்போது... திமுகவும் தமிழ்நாட்டு மக்களும் நீட் வேண்டாம் என்கிறபோது ஏன் செவிசாய்க்கவில்லை? ஏன் இந்த பிடிவாதம்? நீங்கள் இதை கொண்டு வந்ததால் மட்டுமா?

நாங்கள் நாட்டிற்கு வெளியில் இருந்து வந்தவர்கள் இல்லை. நாங்களும் இந்தியர்கள். நாங்கள் இந்தியாவின் எதிரிகளோ தேச விரோதிகளோ அல்ல. நீங்கள் தவறு செய்கிறீர்கள் என்று உணர்த்தப் பார்க்கிறோம். இது நமது இளம் தலைமுறையினருக்கு எதிரானது. நமது குழந்தைகளுக்கு எதிரானது. தமிழ்நாடு, மேற்கு வங்கம், மகாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் என எல்லா இடங்களிலும் குழந்தைகள் பாதிக்கப்படுவதைப் பார்க்கிறோம்.

நிலைமையைப் பாருங்கள்... நாம் இப்போது பெரிய அளவிலான முறைகேடுகளைப் பற்றி பேசுகிறோம். எந்த ஒரு மாநிலத்திற்கும் எதிராகச் செல்லவில்லை... ஆனால் தென் மாநிலங்களில் இந்தத் தேர்வுகள் நடக்கும்போது மிகக் கண்டிப்பாக இருக்கிறது. கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா - மிகக் கண்டிப்பானவை. ஒரு நிமிடம் தாமதமாக வந்தாலும் மாணவர்களை அனுமதிக்க மாட்டார்கள்.

ஆனால் உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற இடங்களில் மிகவும் இணக்கமாக இருக்கிறார்கள். மாநில அரசுகளை நான் பாராட்ட வேண்டும். ஏனென்றால் பெற்றோர் பாடப்புத்தகங்களுடன் வர அனுமதித்து, மாணவர்கள் தொந்தரவு இல்லாமல் நகலெடுக்க வசதி செய்கிறார்கள். இதுதான் நடக்கிறது. முன்னணி செய்தித்தாள்களிலும் தொலைக்காட்சி சேனல்களிலும் இந்த முறைகேடுகளின் ஆதாரங்கள் வந்துள்ளன. ஏன் இது நடக்கிறது?

### வலுவான இந்தியா வரும் தலைமுறையில்!

வலுவான இந்தியா நம் கையில் மட்டும் இல்லை. வலுவான இந்தியா அடுத்த தலைமுறையுடன் கையில் உள்ளது. அடுத்த தலைமுறை அதை உணர்கிறது. அடுத்த தலைமுறைக்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் ஜெனரேஷன் Z என்று என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நீங்கள் கம்பளத்தின் கீழ் தள்ளலாம் என்று நினைத்த நீட் தேர்வை பற்றி இப்போது இங்கே அமர்ந்து விவாதிக்க வைத்துள்ளனர் அவர்கள்.

நாங்கள் ஐந்து திமுக எம்.பி.க்கள் ஆர்.எம்.எல் மருத்துவமனைக்கு சென்று, போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களையும், காயமடைந்து ஐசியூவில் உள்ளவர்களையும், அவர்களது பெற்றோரையும் சந்திக்க சென்றோம். நினைவில் கொள்ளுங்கள், ஆர்.எம்.எல் ஒரு அரசு மருத்துவமனை. மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர்.பேராசிரியர். விவேக் தேவான் அவர்களை சந்தித்தபோது அவர் சொன்னார் - “என்னால் எதுவும் பதில் சொல்ல முடியாது. விரும்பினால் சுகாதார அமைச்சரிடம் போய் பதில் வாங்குங்கள்.” நான் கேட்டேன் - “உங்கள் பதிலை மேற்கோள் காட்டலாமா?” அவர் சொன்னார் - “உங்கள் தொனி எனக்கு பிடிக்கவில்லை” என்று. மாணவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் மருத்துவக் கண்காணிப்பாளரிடம் சென்றோம். இப்படித்தான் அரசு அதிகாரி பதிலளித்தார்.

### வாட்ஸ் அப் குழுக்கள் மூன்று நாள் செயலிழப்பு!

இன்னொரு சம்பவமும் நடந்தது. எத்தனை பேர் கவனித்தீர்கள் என்று தெரியவில்லை. வாட்ஸ்அப்பில் செயலில் உள்ளவர்கள் பார்த்திருக்கலாம். முதல் பாதிக்கப்பட்டவர் நண்பர் திருமதி சுப்ரியா சுலே எம்.பி. அவர்கள் தான். மூன்று நாட்கள் அவரால் வாட்ஸ்அப் குழுக்களைப் பயன்படுத்த முடியவில்லை. காரணம் இளைஞர் போராட்டம். இளைஞர்கள் வெளியே இருந்ததால் வாட்ஸ்அப் முன்அனுப்புதலுக்கு வரம்பு விதித்தது. சரி என்று நினைத்தேன், திருமதி சுப்ரியா சுலேவுக்கு மட்டும் நடந்தது என்று நினைத்தேன்.

பொதுவாக நாடாளுமன்ற கேள்விகளை என் பிராட்காஸ்ட் குழுவுக்கு அனுப்பும் பழக்கம் எனக்கு உள்ளது. பார்த்தால் எனக்கும் தடை! உங்கள் வரம்பை மீறிவிட்டீர்கள். பிசினஸ் கணக்கிற்கு செல்லுங்கள் என்றது. சரி, பிசினஸ் வாட்ஸ்அப் கணக்கிற்கு சென்றேன். அங்கும் 88 மட்டும் அனுமதி. இன்று தவறுதலாக பிரதமரின் ஃபேஸ்புக் பதிவை மெட்டா அகற்றியது.

அரசு மெட்டா தலைவரை வரவழைத்து விளக்கம் கேட்கிறது. நமது உரிமைகள் பற்றி யார் வந்து நம்மிடம் விளக்கம் சொல்லப் போகிறார்கள்? பல்வேறு வழிகளில் தொழில்நுட்ப துறையால் நாங்கள் கட்டுப்படுத்தப் படுகிறோம். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கே இப்படி என்றால் மாணவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறை மெட்டா கேமரா கண்ணாடிகளைப் பயன்படுத்தி மாணவர்களை வீடியோ பதிவு செய்தார்கள். உடனே அவர்களது அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது. அன்று இரவே காவல்துறை அவர்களது வீடுகளுக்கு சென்றார்கள். இப்படித்தான் நமது இளைஞர்களை நடத்த வேண்டுமா? பிஜேபியிடம் கேட்க விரும்புகிறேன்.... பிஜேபி வளர்ந்தது போராட்டங்களால்தான்... நாட்டில் அதிக போராட்டங்கள் நடத்தியது பிஜேபிதான்.

நீங்கள் போராட்டத்தை நடத்தினால் பரவாயில்லை, ஏழை எளிய மாணவர்கள், இளைஞர்கள் அஹிம்சை முறையில் தங்கள் உணர்வை வெளிப்படுத்த வரும்போது ஏன் எதிர்க்கிறீர்கள்? காந்தியடிகள் அவர்களின் வழியில் மாணவர்கள் அஹிம்சைப் போராட்டம் நடத்துவது உங்களுக்கு பிடிக்கவில்லையா?

### ‘நீட்’ தேர்வை முற்றிலும் அகற்றுங்கள்!

நமது எதிர்காலம், நம் நாடின் இளைஞர்கள். அவர்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்த விரும்புகிறார்கள். அவர்களின் கருத்துகளை கேளுங்கள். இத்தகைய கடுமையான தண்டனைகளை மட்டுமே கொண்டுவரும் மசோதாக்களை நிறைவேற்றுவதால் இந்த சிக்கல் தீராது. முக்கியப் சிக்கல் இன்னும் உள்ளது. நீட் நல்லதல்ல.

காங்கிரஸ் நீட் தேர்வை கொண்டு வந்து தவறு செய்திருந்தால், அதைப் பின்பற்ற உங்களை யார் கட்டாயப்படுத்துகிறது? ஒவ்வொரு முறையும் காங்கிரஸ் செய்தது, நாங்கள் அதை செய்தோம் என்கிறீர்கள். ஆம், ஏற்றுக்கொள்கிறேன். காங்கிரஸ் தவறு செய்தது. தயவுசெய்து அதை இப்போதாவது திருத்துங்கள். நமது இளைஞர்களின் மீது நீட் தேர்வை திணியாதீர்கள்.

***நீட் தேர்வை தடை செய்வோம்!***

இவ்வாறு தயாநிதி மாறன் பேசினார்.